MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

# குமாரகால சருக்கத்தில் அரசரின் கனவு சின்னவியல் மற்றும் உளவியல் ஆய்வு

**ஆய்வாளர்**
**கா. செல்வகாமாட்சி,**
**முனைவர் பட்டஆய்வாளர், தமிழ்த்துறை,**
**தியாகராசர்கல்லூரி, மதுரை- 625 009**
**பதிவுஎண்: MKU24FFOL11463**
kskselva2000@gmail.com - 6383347629

**நெறியாளர்:**
**முனைவர்ந.செ.கி.சங்கீத்ராதா,**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**தியாகராசர்கல்லூரி, மதுரை- 625 009**

DOI 10.5281/zenodo.18518047.

**Abstract :**

The Jains played a significant role in the development of epic poetry. All five minor epics are Jain epics. The word 'Kappiyam' is a Tamil word meaning 'that which narrates a story,' and it is a derivative of the Sanskrit word 'Kavya'. Chulamani is one of the five minor epics, and its author is Tholamozhi Thevar. Dreams are seen not only as omens foretelling future events but also as a psychological construct that reveals the characters' inner feelings, mental stress, desires, and fears. Based on this, the objective of this article is to analyze the king's dream in the Kumarakalach Sarukkam from psychological and symbolic perspectives, and to explain its literary interpretation and Jungian and Freudian interpretations.

**KeyWords : Jains - Epical Poetry - Kappiyam - Tholamozhi Dhevar**

## முன்னுரை

சமணர்கள் காப்பிய வளர்ச்சிக்கு பெரும் பங்கு ஆற்றினர். ஐஞ்சிறு காப்பியங்கள் அனைத்தும் சமண காப்பியங்களே ஆகும். காப்பியம் என்பது காப்பை இயம்புவது என்ற பொருள் தரும் தமிழ் சொல் . காவியம் என்ற வடமொழி சொல்லின் திரிப்பு ஆகும்.சூளாமணி ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றாகும் இதன் ஆசிரியர் தோலாமொழித் தேவர்ஆவார் . கனவுஎதிர்கால நிகழ்வுகளை முன்னறிவிக்கும் அறிகுறியாக மட்டுமல்லாது பாத்திரங்களின் உள்ளுணர்வு , மன அழுத்தம் , ஆசை ,அச்சம் ஆகியவற்றையும் வெளிப்படுத்தும் ஒரு உளவியல் வடிவமாக காணப்படுகிறது. இதன் அடிப்படையில் குமாரகாலச் சருக்கத்தில் இடம்பெறும் அரசரின் கனவை உளவியல் மற்றும் சின்னவியல் பார்வைகளில் ஆய்வு செய்து அதன் இலக்கிய விளக்கம் ,யூங்மற்றும்ஃபிராய்டிய விளக்கத்தை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## உளவியல் விளக்கம்

மனிதனின் உள்ளம் அதன் நிலைகளை பற்றிய ஆராய்வது உளவியல் ஆகும் உடல், மனம் இரண்டும் இணைந்து செயல்படும் தன்மை உடையது. இதில் மனதை பற்றிய கருத்துக்களை ஆராய்வதே உளவியல் எனப்பட்டது. தொடக்க காலத்தில் உளவியல் தத்துவவியல் சார்ந்தே விளக்கம் தரப்பட்டது.



http://Creativecommons.org//license/by/4.0/.

கிரேக்க தத்துவவாதி டெமாக்ரடிஸ் முதல் அரிஸ்டாட்டில் வரை பலர் மனம் பற்றி ஆய்வு செய்தனர். அவர்களின் **“பிளேட்டோ என்ற தத்துவவாதி தான் உடலையும் மனதையும் பிரித்துப் பார்த்தார்” (ரவிசுந்தரம்., சிக்மெண்ட் பி்ஃராய்டின் உளவியல் கோட்பாடுகள் ஓர் எளிய அறிமுகம்.,ப.எண்.9.,கருப்புப் பிரதிகள்., சென்னை)** பின்னர் பல்வேறு அறிஞர்களால் மனம் பற்றிய கொள்கைகள் ஆய்வு செய்யப்பட்டன. அதில் சிக்மண்ட் ஃபிராய்டு என்ற அறிஞரின் பங்கு இன்றியமையாதது ஆகும். அவரின் ஆய்வுகளால் உளவியல் பெரும் வளர்ச்சி நிலையை எட்டியது. இவரே உளப்பகுப்பாய்வு தந்தை என்றும் அழைக்கப்படுகின்றார்.ஃபிராய்டின் கருத்துக்களை ஏற்று அவருடன் பணிபுரிந்து வந்த யூங் பின்னாளில் அவருடன் சிறிது கருத்துமாறுபட்டு கூட்டுநனவிலிஎன்ற மனதின் அமைப்பினை கண்டறிந்தார்.

**கனவு**

மனிதனின் ஒவ்வொரு செயலும் மனம் , உடல் இரண்டும் இணைந்த கட்டுப்பாட்டில் தான் உள்ளது. சில நேரங்களில் மனிதன் தனக்கு விருப்பமானவற்றை மனம் சொல்லி அதில் சில தவறுகள் இருப்பினும் மன மகிழ்விற்காக செய்கிறான். ஒரு மனிதனை சுற்றி நிகழ்கின்ற வெளியுலக அனுபவங்கள் நிறைந்த பகுதி நனவு மனமாகும். நனவு மனத்தின் விருப்பங்கள் இந்த சமூகத்திற்கு ஏற்றவைதானா என்று தீர்மானிப்பது நனவடங்கு மனமாகும்.

மனதின் விருப்பம் வெளியிட முடியாத போது அது நனவிலி மனதில் பதிந்து கனவாக வெளிப்படுகின்றது. **“கனவு என்பது நமக்கு நாமே அனுப்பிக் கொள்ளும் கடிதம் அல்லது செய்தி. அது நாம் தூங்கும் போது நடக்கும் ஒரு அர்த்தமுள்ள செயல்பாடு” (நாகூர்ருமி., கனவுகளின் விளக்கம்.,ப.எண்.45.,சிக்ஸ்த்சென்ஸ் பப்ளிகேஷனஸ் சென்னை)**

**“பகற்கனவுகளின் முதிர்ந்த நிலையே கனவுகள்” (ரவிசுந்தரம்., சிக்மெண்ட் பி்ஃராய்டின் உளவியல் கோட்பாடுகள் ஓர் எளிய அறிமுகம்.,ப.எண்.13 கருப்புப் பிரதிகள்., சென்னை)**

கனவுகள் **“ பிரபஞ்ச மனத்தை அறிந்து கொள்ள உதவும் ராஜப்பாட்டை ;” (நாகூர்ருமி., கனவுகளின்விளக்கம்.,ப.எண்.24., சிக்ஸ்த்சென்ஸ் பப்ளிகேஷனஸ் ., சென்னை )**என்று ஃபிராய்டு கனவை வர்ணித்து தனது The Interpretation Of Dreams என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கனவுகள் பற்றி பல வரையறைகள் உள்ளன.

**கனவு- விளக்கமுறைகள்**

காப்பிய நோக்கில் அரசரின் கனவு தெய்வீக நிமித்தமாகக் கருதப்பட்டு அதன் பொருள் நிமித்தகனால் விளக்கப்படுகிறது. ஆனால் , பிராய்டின்உளவியல் கொள்கைகளின் படி கனவு என்பதுமனிதனின் மறைமனத்தின் ஒடுக்கப்பட்ட ஆசைகள் மற்றும் பயங்களின் வெளிப்பாடாகும் . யூங்கின் கருத்துப்படி கனவுகள் மனிதகுலம் முழுவதும் பகிரப்படும் பொதுமனச் சின்னங்களின் வெளிப்பாடாகும்.

**அரசரின் கனவு - நிகழ்வியல் விளக்கம்**

சூளாமணி காப்பியத்தில் குமார காலச் சருக்கத்தில் அரசரது கனவானது இடம்பெற்றுள்ளது . பயாபதி என்னும் அரசன்சுரமை நாட்டினைச் சார்ந்த போதன மாநகரத்தினை ஆட்சி புரிகின்றான் . இவனுக்கு


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

மிகாவதி, சசி என்ற இரு தேவிமார்கள் இருந்தனர் மிகாவதிக்கு விசயன் என்பவனும் சசிக்கு திவிட்டன் என்பவனும் மகனாய்பிறந்தனர் .இவர்கள் இருவரும் வளர்ந்து காளைப் பருவத்தினை எய்தினார். ஒரு நாள் பயாபதி மன்னன் இரவில் உறக்கத்தின் போது ஒரு கனவினை காண்கின்றான்.இக்கனவை பற்றிபயாபதி அரசன் எடுத்துரைப்பதாக இல்லாமல் நிமித்தகன்ஒருவனேஅரசவையில் அரசனின் முன்னிலையில் அரசனே இரவில் நீ ஒரு கனாவினை கண்டுள்ளாய் என்று கூறி அக்கனவினையும் எடுத்துரைக்கிறான்.

**“கயந்தலைக் களிற்றி னாயோர் கனாக்கண்ட துளது கங்குல்**
**நயந்ததுதெரியினம்பி நளிகடல் வண்ணன் றன்னை”** (சூளா.பா.எண்.106)

மெல்லிய தலையை உடைய யானையைகொண்ட அரசனே நீ விண்ணிடத்தில் இருந்து இறங்கி வந்து ஆண் மகனில் சிறந்தவனும் பெரிய கடல் போன்ற கரு நிறத்தினை உடையவனும் ஆன திவிட்டனுக்குவெள்ளிய பூக்களால் அமைந்து விளங்குகின்ற ஒளியினை உடைய மாலையை அணிவித்து தனது இடத்திற்குச் சென்ற விதமாக அக்கனவு நிறைவு பெறுகின்றது என்று கனவினைப் பற்றி நிமித்தகன் எடுத்துரைக்கின்றான்

**“விசும்பகத்திழிந்து வந்தோர் வேழம் வெண்போது சேர்ந்த**
**தயங்கொளிமாலை சூட்டித் தன்னிட மடைந்த தன்றே”**
(சூளா.பா.எண்.106)

உதயணகுமார காவியம் போன்ற பிற காப்பியங்களில் கனவு காண்பவர்களே கனவின் தன்மையை கூறி பின்னர் கனவில் விளக்கம் அறிய முனிவர் அல்லது நிமித்தகனை நாடும் போக்கு உள்ளது . இக்காப்பியமானதுபிற காப்பியங்களில் இருந்து சற்று வேறுபட்டு நிமித்தகனே கனவையும் கனவின் பயனையும் கூறுவதாக அமைந்துள்ளது.

**கனவின் இலக்கியப் பார்வை**

இலக்கியங்களில் கனவு என்பது வருபொருள் கூறல் உத்தியாகவே உள்ளது . தண்டியலங்காரம் காப்பியங்களின் இலக்கணங்களை குறிப்பிடுகையில் இத்தன்மையினையும் ஒன்றாக சுட்டுகின்றது. **“கனவு காண்பவனால் கனவு விவரிக்கப்படும் நிலையே கனவு விரித்தல் ஆகும் . இலக்கியக் கனவு விவரித்தல் ஓர்உத்தியாகவே இடம்பெற்றுள்ளது ” (சாரதாம்பாள்செ., இலக்கியமும் உளப்பகுப்பாய்வும் கொள்கைகளும் பயில் முறைகளும்.,,ப.எண்.42., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட்., சென்னை)** சூளாமணி காப்பியத்தில் கனவு விவரித்தல் நிலையை நிமித்தகனே செய்கின்றான் . கனவு விவரிப்பு நிகழ்விற்கு பிறகு கனவின் பயனையும் குறிப்பிடுகின்றான் . அக்கனவின் பயன் வித்தியாதர அரசன் ஒருவன் இவ்வுலகத்திற்கு வந்து நல்ல மலரால் விளங்குதலை உடைய மாலையணிந்த திவிட்டனது பெயரை புகழ்ந்து போற்றி , தன் மகளைமணம் செய்து கொடுத்துவிட்டு போவான் என்று நிமித்தகன் கனவின் பலனை பயாபதி அரசனிடம் சுட்டுகின்றான்.

**“மின்மலர்ந்திலங்கு பைம்பூண் விஞ்சைவேந்தொருவன் வந்து**
**தன்மக ளொருத்தி தன்னைத் தந்தனன் போகுமென்றான்”**


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

(சூளா.பா.எண்.107)

இவ்வாறு சூளாமணி காப்பியத்தில் அரசனது கனவானது அமையப்பெற்றுள்ளது . அக்கால சமூகத்தில் கனவு ஒரு பெரும் நம்பிக்கையாக கருதப்பட்டது .“ஒருவர் கண்ட கனவின் படி , அவர் எதிர்கால வாழ்வு அமையும் என்று மக்கள் நம்பினர் ”(சேதுராமன்வே., காப்பியங்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்.,ப.எண். 112., சேது பதிப்பகம் .,திருச்சி) நல்ல கனா , தீய கனா என்று பகுத்துப் பார்க்கும் முறைமையும் அக்காலத்தில் இருந்துள்ளது. சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களிலும் இத்தன்மையினை காணலாம்.

இலக்கியப் பார்வையில் குமார காலச் சருக்கத்தில் இடம்பெறும் அரசரின் கனவு கதைநடையை முன்னெடுக்கும் ஒரு இலக்கிய உத்தியாகவே அமைகிறது இக்கனவு பின்னர் நிகழக்கூடிய சம்பவங்களை முன்னறிவிக்கும் முன்னோட்டமாகவும் காப்பிய கவித்துவம் மேன்மையைஉயர்த்தும் அமைப்பாகவும் விளங்குகிறது . இக்கனவு காப்பியக்கதைநடையில் முக்கியமான இலக்கிய கருவியாகக்கருதப்படக் கூடிய தன்மையை உள்ளடக்கியுள்ளது.

**கனவின் உள்மன விளக்கம் ஃபிராய்டிய வாசிப்பு**

கனவுகள் தனிமனிதனின் நனவிலி மன எண்ணங்களோடு தொடர்புடையவையாகும் . கனவு என்பது சொந்த மன அழுத்தங்களின் பிரதிபலிப்பாகும்.

சூளாமணி காப்பியத்தில் அரசனுக்கு இரு தேவியர்மற்றும்இரு மகன்கள் உள்ளனர் ஆடவர் இருவரும் மங்கையர் மனம் விரும்பும் காளைப்பருவத்தை அடைந்தப் பின்னர் அரசனது நனவிலிமனதில் வாரிசுரிமை சிக்கல் எழ கூடாது என்ற எண்ணம் எழுகிறது . மேலும் மரபுப்படி முதல் மகனே அரசாட்சியை ஏற்க வேண்டிய நிலையில் கனவில் இளைய மகன் திவிட்டனுக்கு மாலைசூட்டப்படுவதாக கனவின் காட்சி அமைந்துள்ளது . அரசன் தனது இளைய மகன் மீது கொண்டுள்ள பாசம் , நம்பிக்கை மற்றும் தனிப்பட்ட விருப்பமாக மறை மனதில்ஒடுக்கப்பட்டுள்ளது . இவ்வாறு ஒடுக்கப்பட்ட விருப்பமே கனவில் நிறைவேற்றம் பெறுகிறது.

**“ஒவ்வொரு கனவும் ஏதோ ஒரு விதத்தில் நம் ஆழ்மனத்திலிருக்கும் விருப்பமொன்று நிறைவேறி விட்டதாக காட்டும் ”(நாகூர் ரூமி .,சிக்மண்ட் ஃபிராய்ட்கனவுகளின் விளக்கம் .,ப.எண் 25., சிக்ஸ்த் சென்ஸ் பப்ளிகேஷன்ஸ் ., சென்னை )**அரசரின் கனவும் இவ்வகைமையினைச் சார்ந்த விருப்ப நிறைவேற்ற கனவே ஆகும்

**ஃபிராய்டின் குறியீட்டு விளக்க முறை**

பிராய்டின் கொள்கையின்படி கனவுகளை விளக்குவதற்கு ஆரம்ப காலத்திலிருந்து இரண்டு முறைகள் பின்பற்றப்பட்டு வந்தன.

அவை 1) குறியீட்டு முறை 2)அவிழ்க்கும் முறை

என்பதாகும்.**“ஒன்றை மற்றொன்றால் குறிப்பது அந்த மற்றொன்றுக்குப்பெயர் தான் குறியீடு”(நாகூர் ரூமி .,சிக்மண்ட் ஃபிராய்ட்கனவுகளின் விளக்கம் .,ப.எண் 21., சிக்ஸ்த் சென்ஸ்**


http://Creativecommons.org//license/by/4.0/.

**பப்ளிகேஷன்ஸ்., சென்னை** )இக்கனவில் யானை , மாலை சூட்டுதல் , விண்ணிலிருந்து வருதல் ஆகியவை குறியீட்டு தன்மைஉடையவை.

| **கனவுக்கூறு**. | **குறியீட்டுப்** பொருள் |
|---|---|
| யானை | அதிகார விருப்பம் |
| மாலை | வெற்றி |
| அரசாட்சி | உரிமை |
| இளைய மகன்அரசாட்சி | அரசனின் மறைமன விருப்பம் |
| விண்ணகத்திலிருந்து வருதல் | வித்யாதரஅரசரின் தேர்வு |

இக்கனவில் இடம்பெறும் யானை அரசு அதிகாரத்தின் சக்தியை குறிக்கும் . மாலை சூட்டுதல் வெற்றி அல்லது உரிமை பெறுதலின் வெளிப்பாடாகும் . இளைய மகன் தேர்வு செய்யப்படுதல் அரசனின் மறைமன விருப்பம். விண்ணகத்திலிருந்து யானை வருவது வித்யாதர உலகத்தினர் தேர்வாக தன் விருப்பத்தை நேரடியாக வெளிப்படுத்தாமல் வெளிப்புற அதிகாரத்திற்கு மாற்றி காட்டும் மனப்பாதுகாப்பு முறையாக அரசன் சுட்டுவதாகஇதனை காணலாம்.

**யூங்கின் சின்னவியல் பார்வையில் கனவு:**

யூங் கொள்கைப்படி கனவுகள் தனிமனித மறைமனதின் வெளிப்பாடு மட்டுமல்லாது மனித குலத்தின் பொதுமன நினைவுகளில் பதிந்துள்ள மூலச் சின்னங்களின் வெளிப்பாடாக அமைந்துள்ளது **“குறியீடுகளில், பல எதிர்கால நிகழ்வுகளின் முன்னறிவிப்பாக உள்ளன என்று சுட்டிக்காட்டும் யூங் கனவுகளில் இத்தகு தன்மைகளைப்பரவலாக காணலாம் என்கிறார் .இந்தியாவின் கனவுப் பலன்கள் சகுனம் பார்த்தல் , குறி சொல்லுதல் , சோதிடம் முதலியவை தொலைநோக்கு அடிப்படை கொண்டவை ஆகும் யூங்கிடம்இந்திய தத்துவத்தின் தாக்கம் கணிசமாக இருந்ததை கவனத்திற்கொள்ள வேண்டும் ”(தி.கு இரவிச்சந்திரன் ., ஃபிராய்ட்யுங் லக்கான் அறிமுகமும் அதற்கு அப்பாலும்.,ப.எண் 223., அடையாளம் பதிப்பகம்., திருச்சி)**

இந்திய தத்துவத்தின்தாக்கம்யூங்கிடம் இருந்த தன்மையை இதன் மூலம் நன்கு அறியலாம்.

| இலக்கியக் கூறு | . யூங்கின் சின்னவியல் விளக்கம் |
|---|---|
| யானை | அரசாட்சி வலிமையை குறிக்கும் பொது சின்னம் |
| மாலை சூட்டுதல் | அங்கீகாரம் முடி சூட்டல் ஆகியவற்றை குறிக்கும் பண்பாட்டு வடிவம் |
| விண்ணுலகம் | வித்யாதார உலகம்சாதாரண மனிதன் நிலையை தாண்டி உயர்ந்த அதிகார குறியீடு |

யூங்கின் பார்வையின்படி கனவில் தோன்றும் யானை , மாலை சூட்டுதல் ஆகியவை அரசாட்சி தெய்வீக அங்கீகாரத்தை வெளிப்படுத்தும் பொது சின்னங்கள் ஆகும் . இவை சமூக நம்பிக்கைகளின் குறியீடுகளே ஆகும்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**ஃபிராய்ட் யூங்கிய பார்வை ஒப்பீடு:**

ஃபிராய்டியபார்வையில் கனவு மறைமன (நனவிலிமன) ஆசையாகும் யூங்கிய பார்வையில் பொதுமன சின்னங்களே கனவுகளாகும்.

| அம்சம். | ஃபிராய்டு | யூங் |
|---|---|---|
| கனவின் இயல்பு | மறைமன ஆசை | பொதுமனசின்னம் |
| கவனம் பெறுவது | தனிமனிதன் | சமூகம், பண்பாடு |
| இளைய மகன் தேர்வு | ஒடுக்கப்பட்டவிருப்பம் | புதிய தலைமைச் சின்னம் |
| விண்ணுலகம் | மனப் பாதுகாப்பு இடமாற்றம் | உயர்ந்த அதிகார சின்னம் |
| கனவின் பங்கு | ஆசை நிறைவேற்றம் | புராண வடிவமைப்பு |

இவ்வாறு இருவரின் பார்வையில் இலக்கியக் கனவானது மாறுதல் அடைகிறது . இறுதியாக யூங்கிய பார்வையில் புராண வடிவமைப்பாகவும் ஃபிராய்டிய பார்வையில் அரசரின் விருப்ப நிறைவேற்ற கனவாகவும் திகழ்கிறது.

**தொகுப்புரை**

குமார காலச்சருக்கத்தில் இடம்பெறும் அரசரின் யானைக் கனவு வெளிப்படையாகப் பார்க்கும்போது ஒரு சாதாரண நிமித்த நிகழ்வாகத் தோன்றினாலும், ஆழமாக ஆராய்ந்தபோது பல அடுக்குகளைக் கொண்ட அர்த்தங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்பது ஆய்வின் மூலம் தெளிவாகிறது. இக்கனவை நிகழ்வியல் மற்றும் இலக்கியப் பார்வையில் அணுகும்போது, அது கதைநடையை முன்னெடுக்கும் ஒரு இலக்கிய உத்தியாகவும், பின்னர் நிகழவிருக்கும் அரசியல் மாற்றத்தை முன்னறிவிக்கும் முன்னோட்டமாகவும், அரசாட்சிக்கு உயர்ந்த அங்கீகாரம் வழங்கும் சின்ன அமைப்பாகவும் அமைகிறது.

உளவியல் நோக்கில் ஃபிராய்டின் கருத்துப்படி, இக்கனவு அரசனின் மறைமன ஆசைகள் மற்றும் மனஅழுத்தங்களின் பிரதிபலிப்பாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. குறிப்பாக இளைய மகன் தேர்வு செய்யப்படுவது அரசனின் ஒடுக்கப்பட்ட விருப்பத்தின் கனவியல் நிறைவேற்றமாகக் கருதப்படுகிறது. இதனால் கனவு தனிமனித மனநிலையின் உள்மன மொழியாக விளங்குகிறது.

மறுபுறம், யூங்கிய சின்னவியல் பார்வையில், கனவில் தோன்றும் யானை, மாலை, மேலுலக வருகை போன்ற கூறுகள் அனைத்தும் பொதுமனத்தில் பதிந்துள்ள மூலச் சின்னங்களாகக் காணப்படுகின்றன. இவை அரசாட்சியும் அதிகார மாற்றமும் குறிக்கும் பண்பாட்டு அர்த்தங்களை வெளிப்படுத்துகின்றன. இதனால் கனவு தனிப்பட்ட அனுபவத்தைத் தாண்டி சமூக மற்றும் பண்பாட்டு உணர்வுகளின் வெளிப்பாடாகவும் விளங்குகிறது.எனவே இக்கனவு இலக்கியம், உளவியல், சின்னவியல் ஆகிய மூன்று நிலைகளிலும் பொருள் தரும் பலபரிமாண அமைப்பாகக் கருதப்படல்வேண்டும். இதுபோன்ற அணுகுமுறை தமிழ்க் காப்பியங்களில் இடம்பெறும் கனவுகளை புதிய கோணங்களில் புரிந்துகொள்ள வழிவகுக்கிறது என்பதும் இந்தஆய்வின் முக்கியத்துவமாகும்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**துணைநூற் பட்டியல்**

1. ரவிசுந்தரம், சிக்மெண்ட் ஃப்ராய்டின் உளவியல் கோட்பாடுகள் ஓர் எளிய அறிமுகம் - 2022 கருப்புப் பிரதிகள்;,சென்னை.
2. நாகூர்ருமி - கனவுகளின் விளக்கம் - 2016 - சிக்ஸ்த்சென்ஸ் பப்ளிகேஷனஸ் சென்னை.
3. கீதாவாசன் - தமிழிலக்கியத்தில் உளவியல் - மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
4. சாரதாம்பாள். செ - இலக்கியமும் உளப்பகுப்பாய்வும் கொள்கைகளும் பயில் முறைகளும் - 2019 - நியூ செஞ்சுரி புக் அவுஸ் (பி) லிட், சென்னை.



http://Creativecommons.org//license/by/4.0/.